DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 73/2022 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பிரவீன்காந்த் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.04.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 25.12.2021ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கணினி நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 21.04.2022ம் தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (2) பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 23.03.2020ம் தேதியிட்ட HERO SPLENDOR வாகனத்தின் INSURANCE POLICY பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 25.12.2021ம் தேதியிட்ட ROUGH SKETCH பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. மனுதாரரின் மெடிக்கல் பில்கள் அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 25.12.2021ம் தேதியிட்ட ACCIDENT/INJURY REPORT அசல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 05.01.2022ம் தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. 14.01.2022ம் தேதியிட்ட காயச்சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. மனுதாரரின் பேங்க் பாஸ்புக் நகல் **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த தேதி என்னவென்றால் 25.12.2021 ஆகும். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் காலையில் 08.00 இருக்கும். விபத்தின் போது நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேனா என்றால் சரிதான். பின்னால் யார் அமர்ந்திருந்தார் என்றால் என் தம்பி அமர்ந்திருந்தார். நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் TN 63 CY 1401 ஆகும். விபத்தின்போது எந்த திசையில் இருந்து எந்த திசையில் சென்றேன் என்றால் கிழக்கிலிருந்து மேற்கு திசையில் சென்றேன். விபத்து நடந்து அகலமான ரோடா என்றால் அகலமான ரோடுதான், நான் ஓரமாக சென்று கொண்டிருந்தேன். விபத்து ஏற்படுத்திய வாகனம் என்ன வாகனம் என்றால் இருசக்கர வாகனம் ஆகும். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனம் எதிரே வந்ததா அல்லது பக்கவாட்டிலிருந்து வந்ததா என்றால் எதிரே இருந்து வந்தது.

2. விபத்து நடுரோட்டில் நடந்ததா என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்சிஏ முடித்துள்ளேன். தற்போது என்ன வேலை பார்த்து வருகிறேன்

என்றால் சென்னையில் வேலை தேடுகிறேன். விபத்தின்போது எங்கெங்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் வலது கண்ணின் கீழாக எலும்பு முறிவு ஏற்பட்டு தலையில் இருந்து எலும்பு எடுத்து வைக்கப்பட்டுள்ளது. விபத்தின்போது நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். வேறு எங்கும் அடிபட்டுள்ளதா என்றால் பற்கள் 4 மாற்றப்பட்டுள்ளது. என் தாயார் அரசு பள்ளி ஆசிரியை என்றால் சரிதான். நான் சிகிச்சை பெற்றது எந்த மருத்துவமனை என்றால் மதுரை, Hannah Joseph Hospital ஆகும். என் தாயார் அரசு ஆசிரியை என்பதால் எம்டி இந்தியா என்ற மருத்துவக்காப்பீடு அரசின் மூலமாக செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. மேற்படி மருத்துவக்காப்பீடு மூலமாக கணிசமான தொகையை நான் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். அதில் எவ்வளவு தொகை பெற்றுள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியாக தெரியாது. தற்போது ஏற்பட்டுள்ள காயங்கள் ஓரளவு ஆறிவிட்டதா என்றால் ஆறிவிட்டது, வலி மட்டும் உள்ளது. ம.சா.ஆ.6 ஆவணம் தகுந்த மருத்துவ அதிகாரிகள் மூலம்தான் குறியீடு செய்ய இயலும் என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ஆவணம் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பிரேம்குமாருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. விபத்திற்கு காரணம் என்னுடைய கவனக்குறைவுதான் என்றும், நான் தான் முறையாக வாகனத்தை ஓட்டாமல் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி இந்த விபத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 3ம் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.